රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No: CS/SLAS/EB/Result | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 2024.07.31 |

அமைச்சின் செயலாளர்கள்
மாகாணத் தலைமைச் செயலாளர்கள்
ஆணைக்குழுவின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை நிர்வாக சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2019 (II) மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020 (I) பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பானது</u>**

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் இலக்கம் 2357 மற்றும் 2023.11.03 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019 (II) மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I) ஆகிய பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகளும் இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

02. அதன்படி, 2023.11.03 ஆம் திகதிய மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவிப்பில் பந்தி இலக்கம் 16 மூலம் எடுத்துக்கூறப்பட்டுள்ளவாறு இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் பற்றிய ஜனாதிபதியின் செயலாளரது இலக்கம் SP/SB/1/13 மற்றும் 2013.10.09 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளை வெளியிடலை, உத்தியோகத்தர்களுக்கான பெறுபேறுகளின் வெளியிடலாகக் கருத வேண்டும் என்பதோடு, திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேற்று ஆவணங்களின் உரிய பிரதிகளை உத்தியோகத்தர்களது தனிப்பட்ட கோப்புகளில் உள்ளிட வேண்டும்.

දුරකතන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / வெப்தளம் / Website: www.pubad.gov.lk

03. மேற்படி விடயங்களின் மீது மீண்டும் உங்களின் கவனத்தை ஈர்ப்பதோடு, அதன்படி மேற்படி பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியாக பெறுபேற்று ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்வதோடு இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக (www.pubad.gov.lk இற்குள் பிரவேசித்து முதல் பக்கத்தின் “Exam Results” நீட்டிப்பு மூலம் ) மேற்படி பரீட்சைப் பெறுபேற்று ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம்.

04. மேலும், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சேவை உறுதிப்படுத்தல் மற்றும் பதவி உயர்வுக்கான விண்ணப்பங்களை அனுப்பும் போது, வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பெறுபேறுகளை உறுதிப்படுத்த இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறு ஆவணத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட பிரதியை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்/.பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி இலக்கம் : 0112-698605
தொலைநகல் இலக்கம் : 0112-683651
மின்னஞ்சல் முகவரி : pubad.dslas@gmail.com